# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 13.04.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:** எதுவரை உறுதியான நிலைநிற்றல் இல்லையோ அதுவரை பைஅத்தும் முழுமை பெறாது. மனிதன் இறைவனை நோக்கி தனது பாதங்களை எடுத்து வைக்கும் போது வழியில் பல்வேறு துன்பங்களையும், துயரங்களையும் மற்றும் புயல்களையும் சந்திக்க வேண்டியதிருக்கும். எதுவரை மனிதன் அவற்றை கவனத்துடன் கடக்க மாட்டானோ அதுவரை அவன் தனது எல்லையை அடையமாட்டான்.

**கூறுகின்றார்கள்:** அமைதியின் நிலையில் உறுதியான நிலைநிற்றல் பற்றி அறிய முடியாது. ஏனென்றால் அமைதியான, நிம்மதியான நேரத்தில் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். மேலும் நண்பர்கள் ஆவதற்கு பலரும் தயாராக இருப்பார்கள். எல்லா விதமான துன்பங்களையும் சகித்துக் கொள்பவரே முஸ்தகீம் (உறுதியாக நிலை நிற்பவர்) ஆவார்.

**பிறகு அன்னார் ஓரிடத்தில் இஸ்திகாமத் உறுதியாக நிலைநிற்றல் எவ்வாறு கிடைக்கும் என்பதைப் பற்றி அறிவுறுத்தியவாறு கூறுகின்றார்கள்:**

ஸலவாத் ஓதுவது, உறுதியாக நிலைநிற்றல் கிடைப்பதற்குரிய சிறந்ததொரு வழியாகும். அதனை அதிகமாக ஓதுங்கள். ஸலவாத், உறுதியாக நிலைநிற்றல் கிடைப்பதற்குரிய மிகச்சிறந்த ஒரு வழியாகும். அதனை மிக அதிகமாக ஓதுங்கள். அதனை சடங்காகவும், பழக்கமாகவும் ஓதாதீர்கள். மாறாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அழகு, கருணையை முன்னிறுத்தியவாறு அன்னாருடைய உயர்வு மற்றும் மேன்மையின் முன்னேற்றத்திற்காக அன்னாருடைய வெற்றிகளுக்காக ஓதுங்கள். இதன் விளைவாக துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுதல் என்ற இனிப்பான, சுவையான பழங்கள் உங்களுக்கு கிடைக்கும்.

**மேலும் ஒரு சந்தர்ப்பத்தில் தனது ஜமாஅத்தினர்களுக்கு அறிவுரை கூறியவாறு கூறுகின்றார்கள்:**

உள்ளத்தின் உறுதிப்பாட்டிற்காக அதிகமாக இஸ்திக்ஃபார் செய்து வாருங்கள். தற்போது நான், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்களுடைய பொறுமை, உறுதிப்பாடு மற்றும் அல்லாஹ்வுடைய அன்பான நடைமுறை அவர்களுடன் எவ்வாறிருந்தது? அவர்களது துஆக்கள் எவ்வாறெல்லாம் ஏற்றுக் கொள்ளப்பட்டது போன்ற சில சம்பவங்களை எடுத்துரைப்பேன்.

**ஹஸ்ரத் நூர் முஹம்மது சாஹிப் அறிவிப்பு செய்கின்றார்கள்:**

1906ம் ஆண்டு ஜனவரி 7ம் தேதி நான் எனது குடும்பத்துடன் பலூசிஸ்தானுக்கு மீண்டும் வந்தேன். நான் அங்கு வந்தடைந்ததும், எனது ஆசிரியரான மவ்லவி சாஹிப் அஹ்லே ஹதீஸ் பிரிவைச் சேர்ந்த மஸ்ஜிதின் இமாமாக அப்போது இருந்தார். நான் திரும்ப வந்து விட்டேன் என்ற செய்தி அறிந்ததும் என்னைத் தேடினார். அதாவது இந்த சஹாபி காதியான் வந்திருந்து பைஅத் செய்து விட்டு திரும்பிச் சென்றிருந்தார்கள்.

அந்த இமாம் கூறுகிறார்: மிர்ஸா சாஹிப் நூல்களில் சரியாகத்தான் எழுதுகிறார். ஆனால் மறைவாக வேறொன்றைக் கூறுகின்றார். அதாவது கூறுவது ஒன்றாகவும், எழுதுவது வேறொன்றாகவும் உள்ளது. மேலும் தனது சீடர்களுக்கு கூறுவது வேறாகவும் இருக்கிறது என்றார். எனவே ஹஸ்ரத் நூர் முஹம்மது சாஹிப், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கடிதம் மூலமாக இதனை தெரிவித்தார்கள். பிறகு முஃப்தி முஹம்மது சாதிக் மூலமாக இதற்கான பதில் கிடைத்தது. அதில் நமது அறிவுரை உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது ஆகும். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சொல் மற்றும் செயலில் குறைவு ஏற்படுத்துபவர் அல்லது மிகைப்படுத்துபவர் சாபத்திற்கு உரியவராகவார். இந்த பதிலை மவ்லவி சாஹிபிற்கு

காண்பிக்கப்பட்ட போது அவர் வேறெதுவும் கூறாமல், அவர் உமக்கும் இல்ஹாம் இறங்குகிறதா? இல்லையா? எனக் கேட்டார். அதாவது அவர் கேலி செய்ய ஆரம்பித்தார். அப்போது நான் ஆமாம் என்றேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பத்திரிகையில், மக்கள் நம்மைப் பற்றி இறைவனிடம் கேட்க வேண்டும் என கூறியிருப்பதைப் படித்து விட்டு நான் துஆ செய்தேன். எனக்கு, இவர் உண்மையாளர் ஆவார்; ஏற்றுக்கொள் என இல்ஹாம் இறங்கியது.

இதற்குப் பிறகு நான் எங்கு சென்றாலும் பஜாருக்குச் சென்றாலும், அலுவலகத்தின் உள்ளேயும், வெளியேயும் மக்கள் என்னை கோபமூட்டுவதற்காக கேலி செய்வார்கள். மேலும் பல வகையில் என்னை கோபமூட்டுவதற்காக நான் மஸீஹ் மவ்வூதிடம் பைஅத் செய்து வந்துள்ளேன் என்றும், வாக்களிக்கப்பட்ட பணியாளரிடம் ஒருவர் ஹுக்கா கொண்டு வா! வாக்களிக்கப்பட்ட பூனை அடியுங்கள்! வாக்களிக்கப்பட்ட காகிதங்களை கொண்டு வாருங்கள்! இதுபோன்ற வீணான கூற்றுக்களைக் கூற ஆரம்பித்தனர்.

அவர் கூறுகின்றார்: அந்த சமயத்தில் எனது துஆ இதுவாக இருந்தது. இறைவா! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின காரணமாக எனது அந்த துஆவை ஏற்றுக் கொள்வாயாக! மேலும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஹுஸுருக்கு விண்ணப்பம் எழுதி வந்தேன். அந்த வகையில் எனது துஆ இதுவாக இருந்தது. அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அருள்களின் விளைவாக என்னைப் பதவி உயர்வுடன் குவெட்டாவிலிருந்து இடமாற்றம் செய்வாயாக! ஏனென்றால், எனது மேலதிகாரி கான்பகதூர் முஹம்மது ஜலாலுதீன் CIE அரசியல் ஆலோசகராக இருந்தார். அவரும் அஹ்மதிய்யத்திற்கு மாபெரும் எதிரி ஆவார். எனவே இறைவா! என்னை இந்த துன்பத்திலிருந்து காப்பாற்றுவாயாக! என துஆ செய்தேன். மேலும் இடமாற்றம் பதவி உயர்வுடன் கிடைக்க வேண்டும் என துஆ செய்தேன்.

கூறுகின்றார்: மூன்று நாட்கள் கூட கழியவில்லை. நான் முஸ்தஃபா சாஹிப் தாடி உடைய சொந்தக்காரர் ஆகி, புதிய இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டேன். அங்கு சென்றதும், நான் தனியாக இருப்பதை உணர்ந்தேன். பிறகு ஹுஸுருக்கு தினமும் ஒரு கடிதம் எழுத ஆரம்பித்தேன். அதன் விளைவாக இறைவனுடைய அருளால் அங்கு ஒரு வருடத்திற்குள் 12 பேரை அஹ்மதி ஆக்கினேன். மேலும் எந்த அளவு எனக்கு இல்ஹாம்கள் இறங்கினவென்றால், இல்ஹாம் இறங்காத நாளே இல்லை.

ரிஜிஸ்டர் அறிவிப்பில் எழுதக்கூடியவர் கொஞ்சம் முன்னும் பின்னுமாக எழுதி இருக்கிறார். எவ்வாறாயினும், அடுத்து அறிவிப்பு தொடர்கிறது. ஷாதி கான் என்ற பெயரைக் கொண்ட ஒரு கஸாப் கடைக்காரர் இருந்தார். அவர் அஹ்மதி ஆகிவிட்டார். மேலும் அங்கு மியான் குல்மு சாஹிப் இருந்தார். இவர் பலோச் மக்களுடைய தலைவராக இருந்தார். அவருக்கு ஷாதி கான் அஹ்மதி ஆகிவிட்டார் என தெரிய வந்ததும், அவர் தனது மக்களிடம் கஸாப்கடைக்காரனான ஷாதி கான் கடையிலிருந்து வாங்கிய இறைச்சியை எறிந்து விடுங்கள். இவர் அஹ்மதி ஆவார். இவரை அடியுங்கள் என்றார். முரட்டு முஸ்லிம்கள் அவ்வாறே செய்தனர். அவருடைய தலையிலிருந்து இரத்தம் வடிந்தது. இந்த வழக்கு தொடர்பாக Deputy Commissioner சாஹிப் பகதூர் சித்தி பலுசிஸ்தானியிடம் தான் விண்ணப்பம் கொடுக்கப்பட்டது.

**கூறுகின்றார்:** அப்போது, ஷாதி கானுடைய வீடு பாதுகாக்கப்படும் என எனக்கு இல்ஹாம் இறங்கியது. நான் அனைத்து நண்பர்களிடம், தனது மனைவி, குழந்தைகளுடன் மொத்தம் 36 பேர் ஆவோம். அனைவரும் ஷாதி கான் வீட்டிற்கு செல்லுங்கள் என்றேன். அதன்படி அனைவரும் சென்றனர். தீர்ப்பிற்காக காத்திருந்தோம். ஷாதி கான் ஓர் இரவில் எழுந்து கூறினார். (அவரும் ஷாதி கான் சாஹிபிடம் கனவு கண்டார்.) நான் மிகப்பெரிய கூட்டத்திற்கு கொண்டு வரப்படுகின்றேன். மேலும் அங்கு ஒருவர் கூடாரம் அமைத்தவாறு ஒரு சிம்மாசனத்தில் மிகவும் கௌரவத்துடன் அமர்ந்திருந்தார். அவரது அருகில் இந்த உம்மத்தின் அவ்லியாக்கள் உட்கார்ந்திருநதார்கள். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)அவர்கள் என்னை எதிர்பார்த்தவாறு வாசலில் நிற்கிறார்கள். நான் வந்த போது, எனது தலையிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)அவர்கள் தனது ஒரு கையினால் எனது நாடியையும் மற்றொரு கையினால் எனது தலையைப் பிடித்தவாறு அந்த சிம்மாசனத்தின் அருகில் கொண்டு சென்றார்கள். எனது சீடர்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டால் நான் என்ன செய்வேன்? என்றார்கள். சிம்மாசனத்தில்

அமர்ந்திருந்தவர் யாராவது இருக்கிறீர்களா? எனக் கேட்டார். ஒரு மிகப்பெரிய ஜெனரல் பதக்கங்களால் அலங்கரிக்கப்பட்டவாறு வந்தார். அவருக்கு ஷாதி கானுடன் செல்ல வேண்டும் என கட்டளையிடப்பட்டது. பிறகு நான் முன்பாக சென்றேன். எனக்கு பின்பாக ஜெனரல் அவருக்கு பின்பு இராணுவம் இந்த ஊரில் நுழைந்தது.

இதற்குப் பிறகு அவர், நான் வழக்கு தொடர்ந்து நடத்த விரும்பவில்லை என்றார். எனக்குரிய ஈட்டை இறைவன் வழங்குவான். பிறகு மிகப்பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அது ஊரின் வெளிப்பகுதியை மூழ்கடித்து விட்டது. ஆனால் ஷாதி கான் உடைய வீடு மட்டும் தப்பித்தது.

**டாஸ்காவைச் சேர்ந்த அப்துல் ஜப்பார் சாஹிப் மகன் ஹஸ்ரத் ஜான் முஹம்மது சாஹிப் கூறுகின்றார்கள்:**

1903-ல் அஹ்மதிகளாகிய எங்களுக்கு மிக அதிகமாக எதிர்ப்புகள் ஏற்பட்டன. குறிப்பாக என் மீதும் எதிர்ப்புகள் ஏற்பட்டன. ஏனென்றால் டாஸ்காவில் நான் தான் முதல் அஹ்மதியாக இருந்தேன். எனக்கு மிகவும் அதிகமான கஷ்டங்களைக் கொடுத்தனர். வீட்டிற்க தண்ணீர் கொண்டு வருபவனையும், வீட்டை சுத்தம் செய்பவனையும் தடுத்தனர். ஆனால் தண்ணீர் கொடுப்பவனிடம் தாசில்தார் இவருக்கு தண்ணீர் கொடுக்கும்படி கட்டளையிட்டிருந்தார்கள். எனவே தண்ணீர் கொடுப்பவன் மவ்லவிகளிடம் நீங்கள் என்னை தண்ணீர் கொடுப்பதிலிருந்து தடுத்தால், நான் தாசில்தாரிடம் கூறி விடுவேன் என்றான். எனவே மவ்லவிகள் அதனை விட்டு விட்டனர்.

ஆனால் வீடு பெருக்குபவரிடம் அவர்கள் கூறியபோது, அவர் இவ்வாறு கூறினான். பொதுவாக இந்தியா மற்றும் பாகிஸ்தானில் வீடு பெருக்குகிறவர்கள் கிறிஸ்தவர்களாகத்தான் இருப்பார்கள் அல்லது பொதுவாக மக்கள் விரும்பாத சாதியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். ஆனால் எந்த விதமான வேறுபாடும், எந்த விதமான ஏற்றத்தாழ்வும் இருக்காது.

எவ்வாறாயினும், அவர்கள் இதனைக் கூறியதும் வீடு பெருக்குபவர் கூறினார். மவ்லவி சாஹிப் உங்களுடன் சாப்பிடுவதில்லை அல்லது நீங்களும் அவருடன் சாப்பிடுவதில்லை. நீங்கள் எங்களுடன் சேர்ந்து சாப்பிடுவதேயில்லை. எனவே நீங்கள் எங்களுடன் சேர்ந்து சாப்பிட்டால் நாங்கள் மவ்லவி சாஹிபை விட்டு விடுவோம் என்ற நிபந்தனை வைத்தனர். இதனைக் கேட்ட எதிரிகள் அங்கு மிகவும் இழிவடைந்தார்கள். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எழுதினேன். அதில் மக்கள் எனக்கு தண்ணீர் கொடுப்பதிலிருந்து தடுக்கிறார்கள். பள்ளிவாசலில் தொழுவதிலிருந்து தடுக்கிறார்கள்.

ஒருவேளை மவ்லவி ஃபிரோஸ்தீன் மற்றும் சவுத்ரி நஸ்ருல்லாஹ் கான் சாஹிப் ஆகியோர் அஹ்மதி ஆகிவிட்டால் ஜமாஅத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு விடும் என எழுதினேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனக்கு இவ்வாறு பதில் எழுதினார்கள்:**

நீங்கள் ஒருபோதும் அவர் அஹ்மதி ஆகிவிட்டால் ஜமாஅத் பெரிதாகி விடும் என நினைக்காதீர்கள். நீங்கள் பொறுமையை மேற்கொள்ளுங்கள். தொழுகையில் துஆக்களைச் செய்யுங்கள். இது விண்ணின் ஜமாஅத் ஆகும். இன்ஷா அல்லாஹ் இது பெரிதாகும். பூமியின் எல்லை வரை எட்டும். மேலும் நல்ல ஆன்மாக்கள் அனைவரும் இதில் நுழைவர். பள்ளிவாசல்கள் அஹ்மதிகளுடையதாக இருக்கும். நீங்கள் பயப்படாதீர்கள்.

எனவே, எந்த அளவு தடைகளை விதித்தாலும், எதிர்த்தாலும், பள்ளிவாசல்கள் அஹ்மதிகளுக்கு மட்டுமாகவே இருக்கும்.

**அல்லாஹ் பக்ஸ் சாஹிபுடைய மகன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் சாஹிப் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு மரணம் ஏற்பட்ட போது நான் அங்கு தான் இருந்தேன். அஹ்மதியல்லாதவர்கள், எதிரிகள் போன்றோர் கட்டடத்திற்கு வெளியே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். நாங்கள் வாசலுக்கு வெளியே உட்கார்ந்திருந்தோம். ஒரு நண்பர் அழ ஆரம்பித்தார். அப்போது ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் வெளியே வந்தார்கள்.

மேலும் கூறினார்கள்: எனது ஈமான் எவ்வாறு முதலில் இருந்ததோ இப்போதும் அதேபோன்று தான் உள்ளது. ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் தனது பணியை முடித்து விட்டு சென்று விட்டார்கள். இது உறுதிப்பாட்டை காண்பிக்க வேண்டிய இடமாகும். அழக்கூடிய இடம் கிடையாது.

முஸ்தகீம் சாஹிபுடைய மகனாகிய கைர் தீன் சாஹிப் உடைய ஓர் அறிவிப்பு உள்ளது. கூறுகின்றார்கள்: எனது ஆசிரியர் அவரது பெயர் அல்லாஹ் தத்தா சாஹிப் ஆகும். அவர் மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் பட்டாலவியைப் பின்பற்றக் கூடியவர் ஆவார். முஹம்மது ஹுஸைன் பட்டாலவி இஷாஅத்துஸ் ஸுன்னா என்ற பத்திரிகையை வெளியிட்டு வந்தார். அவர் அந்த பத்திரிகையைப் படித்தார். மேலும் மவ்லவி சாஹிபிடம் நீங்கள் புகழ்ந்து எழுதிய அந்த மனிதர் யார் என கேட்டார். அவர் எங்கு வசித்து வருகிறார். அவரை சந்திக்க வேண்டும் என எனது உள்ளம் விரும்புகிறது என்றார்.

அந்த வகையில் அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திப்பதற்காக காதியான் வந்தார். அவர் வந்த போது ஹுஸுர் படுத்திருந்தார்கள். அவர் வந்து ஹுஸுர் அவர்களின் கை, கால்களை அமுக்க ஆரம்பித்தனர். அமுக்கிக் கொண்டிருக்கும் போது ஹுஸுர் உடைய முகத்தைப் பார்த்தார். பிறகு கூறினார். ஹுஸுர் ஹதீஸ்களில் இமாம் மஹ்தியைப் பற்றி கூறப்பட்டுள்ள அம்சங்கள் அனைத்தும் உங்களிடம் முழுமையாக தென்படுகிறது. (இது மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் வாங்குவதற்கு முன்பு நடந்த சம்பவமாகும்). ஹுஸுர் சிரித்தவாறு அமைதியாக இருந்தார்கள். பிறகு மவ்லவி அல்லாஹ் தத்தா சாஹிப் கூறுகின்றார்கள். ஹுஸுர்! எனது உள்ளம் உங்களிடம் பைஅத் செய்ய வேண்டும் என விரும்புகிறது என கூறினார்கள்.

அதற்கு ஹுஸுர் எனக்கு இப்போது எந்த விதமான கட்டளையும் இதனைப் பற்றி வரவில்லை என்றார்கள்.

(இதிலிருந்து தெரியவருவது என்னவென்றால், ஹுஸுர் என்னவாக ஆக வேண்டுமோ ஆகி விட்டார்கள். ஆனால் இறை கட்டளைக்கு வேண்டி காத்திருந்தார்கள்.)

கூறுகின்றார்: எனது ஆசிரியர் அல்லாஹ் தத்தா சாஹிப் ஹுஸுருடைய அன்பில் மூழ்கி விட்டார்கள். பிறகு தனது கிராமத்திற்கு திரும்பச் சென்றார்கள்.

ஹுஸுர் அவர்கள் பைஅத்திற்கான அறிவிப்பை வெளியிட்டவுடனே, அவர்கள் பைஅத் செய்து விட்டார்கள். இறை அருளால் நான் அவர்களுடன் எந்தவிதமான எதிர்ப்பும் காட்டவில்லை. அவர்களுடனே இருந்தேன். மக்கள் அவருக்கு பல துன்பங்களையும், துயரங்களையும் இழைத்தனர். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது நல்லெண்ணம் கொண்டிருந்தேன். ஆனால் சோம்பலின் காரணமாக 1906ம் ஆண்டு வரை தாமதம் செயதேன். 1906 -ல் இறை அருளால் நான் ஹுஸுருடைய கையில் பைஅத் செய்தேன். ளுஹர் பாங்கு கூறப்பட்டிருந்தது. ஹுஸுர் மஸ்ஜித் முபாரக் உடைய மெஹ்ராபில் உட்கார்ந்திருந்தார்கள். யாராவது பைஅத் செய்யக் கூடியவர் இருக்கிறார் என்றால், வந்து பைஅத் செய்யட்டும் என ஹுஸுர் கூறினார்கள். நான் உளூ செய்து விட்டு தொழுகைக்காக வந்து கொண்டிருந்தேன். நான படிக்கட்டிற்கு அருகில் வந்தபோது யாரோ ஒருவர் யாராது பைஅத் செய்ய வேண்டியது இருந்தால் விரைவாக வந்து பைஅத் செய்ய வேண்டும் என ஹுஸுர் அவர்கள் கூறுவதாக கூறினார். எனவே நான் உடனே சென்று பைஅத் செய்தேன்.

பிறகு காஸி முஹம்மது யூசுப் சாஹிப் கூறுகின்றார்கள்: ஏறக்குறைய 27 வருடங்கள் அரசாங்க பணி செய்தேன். 15 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை மாத சம்பளம் கிடைத்தது. சில சமயம் அதனை விட அதிகமும் கிடைத்தது. எந்த நண்பரும் உதவி செய்ய முடியாத ஒவ்வொரு கஷ்டத்திலும் அல்லாஹ் மட்டுமே எனக்கு உதவி புரிந்து வந்தான். எனது அனைத்து வேலைகளும் அவனது அருளாலேயே நடைபெற்றன. பெரிய பெரிய சோதனைகள் வந்தன. மிகவும் எளிதாக கடந்து விட்டன. அறியாதவர்கள் கஷ்டத்தைக் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் தெரிந்தவர்களும் பல வருடங்களாக யூசுப் (அலை) அவர்களுடைய சகோதரர்களைப் போன்று நடந்து வந்தனர். ஆனால் அல்லாஹ் ஒவ்வொரு எதிரியையும், ஒவ்வொரு

பொறாமைக்காரரையும் அவர்களது பொறாமையிலும் குழப்பத்திலும் தோல்வி அடைய செய்தான். இறைவன் எப்பொழுதும் எனது துஆவை கேட்டு வந்தான். அல்லாஹ்விடம் மட்டுமே நான் அனைத்து நன்மைகளையும் நாடியிருந்தேன்.

கூறுகின்றார்கள்: லாஹுர்வாசிகள் நான் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களை இழிவுபடுத்தியதாக என் மீது குற்றம் சாட்டினார்கள். என்னை கொலை செய்ய முடிவு செய்தனர். குற்றமற்ற ஒருவன் மூலம் என்னை வெட்டவெளியில் கொலை செய்வதற்கு ஏற்பாடு செய்தனர். இறைவன் என்னை காப்பாற்றுவதற்காக துப்பாக்கியில் குண்டை கோணலாக்கி விட்டான். இதன் மூலம் துப்பாக்கி சுட முடியாமல் போனது. கொலைகாரனை முஹம்மது நஜீப் கான் சாஹிப் அஹ்மதி என்பவர் பிடித்து போலீஸிடம் ஒப்படைத்தார். பாதுகாப்பு போலீஸ் அவனுக்கு 9 வருடம் வரை சிறை தண்டனை வழங்கியது. எதிரி தோல்வி அடைந்தான். இறைவன் எங்களுடன் இருந்தான். தற்போதும் இருக்கிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இல்ஹாம் நிறைவேறியது. அதாவது நெருப்பைக் கொண்டு எங்களை பயமுறுத்தாதீர்கள். நெருப்பு எங்களது அடிமையாகும். மேலும் அடிமையின் அடிமை ஆகும்.

**பிறகு மியான் நிஸாமுத்தீன் டெய்லர் மாஸ்டர் கூறுகின்றார்:**

1902 மார்ச் மாதம் நாங்கள் ஜெஹ்லமிலிருந்து அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாமுடைய ஜல்ஸா பார்ப்பதற்காக லாஹுர் வந்தோம். நாங்கள் மூன்று பேர் இருந்தோம். ஜல்ஸா அரங்கத்திற்கு வெளியில் ஒரு மவ்லவியைக் கண்டோம். அவர் திருக்குர்ஆனை கையில் வைத்தவாறு நின்று கொண்டிருந்தார். மேலும் அவர் இவ்வாறு கூறினார். அதாவது நான் குர்ஆனை கையில் வைத்து கூறுகின்றேன். மிர்ஸாவுக்கு (நபியுல்லாஹ்) தொழுநோய் வந்து விட்டது. அவர் நபிமார்களை இழிவாகப் பேசினார். இதனுடன் சிறிய பிரசுரத்தையும் கொடுத்துக் கொண்டிருந்தார். அதிலும் இவர் கூறிய விஷயங்களே இருந்தன. நான் அவரிடமிருந்து ஒரு பிரசுரத்தை வாங்கினேன். பிறகு எனது நண்பர்களிடம் காதியான் சென்று மிர்ஸா சாஹிபுடைய நிலைமையைப் பார்த்து விட்டு வருவோம். இதன் மூலம் கண்களால் பார்த்த சம்பவம் ஆகி விடும் என்றேன். நாங்கள் மூவரும் காதியான் வந்தோம். மக்ரிப் தொழுகையில் ஹஸ்ரத் சாஹிபைக் கண்டோம். அன்னார் மிகவும் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தார்கள். நானும் எனது நண்பர்களும் ஆச்சரியப்பட்டோம். இது என்ன? ஒன்று, நமது மவ்லவி பொய் கூறி இருக்க வேண்டாம் அல்லது நமக்கு மிர்ஸா சாஹிப் என்று காட்டப்பட்டவர் மிர்ஸா சாஹிபாக இல்லாமல் வேறொருவராக இருக்க வேண்டும். இரவு கழிந்தது. காலையில் நாங்கள் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் சென்று விசாரித்தோம். அவர்கள், நீங்கள் பார்த்த இவரே தான் மிர்ஸா சாஹிப் என்றார்கள். மேலும் தனது சட்டைப் பையிலிருந்து பிரசுரத்தை எடுத்து இது எங்களிடமும் வந்திருக்கிறது என்றார்கள். நீங்கள் இவரை உண்மையாளர் என கூறுவீர்களா? அல்லது இவ்வளவு பெரிய பொய்யைக் கூறிய உங்களது மவ்லவியையா? திருக்குர்ஆனை எடுத்து மிர்ஸாவுக்கு தொழுநோய் வந்து விட்டது என அறிவிப்பு செய்பவரையா? அல்லது உங்களுக்கு முன்பு ஆரோக்கியமாக நிற்கக்கூடிய மிர்ஸா சாஹிபையா? எனக் கேட்டார்கள்.

ளுஹர் தொழுகை நேரத்தின் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொழுகைக்காக வந்தபோது ஹுஸுரிடம் நான் அனைத்து விஷயங்களையும் கூறினேன். அதற்கு ஹுஸுர் புன்சிரித்தவாறு என்னை எதிர்ப்பதில் மவ்லவிகள் பொய்யை அனுமதிக்கப்பட்டதாகக் கருதுகின்றனர் என்றார்கள். ஹதீஸ்களில், மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் உலமாக்கள் மிகக் கெட்ட படைப்பினங்களாக இருப்பார்கள் என எழுதப்பட்டிருக்கின்றது. எனக்கு ஹுஸுருடைய விஷயங்களைக் கேட்டு நிம்மதி கிடைத்தது.

ஹுஸுரிடம் நான் பைஅத் செய்கிறேன். எனது நண்பர்களும் பைஅத் செய்கின்றனர். இவ்வளவு பெரிய பொய்யை கண்ட பிறகு ஒருபோதும் பொறுத்துக் கொள்ள முடியாது. தாங்கள் எங்களை இப்போதே பைஅத்தில் இணைத்துக் கருணை புரியுங்கள் என்றேன்.

ஹுஸூர் கூறினார்கள்: இவ்வளவு சீக்கிரம் பைஅத் செய்வது சரி கிடையாது. இன்னும் நீங்கள் எங்களது விஷயங்களைக் கேட்கவேயில்லை. சில நாட்கள் எனது அருகில் இருங்கள். விஷயங்களைக் கேளுங்கள். பிறகு முழுமையான நம்பிக்கை வந்தால் பைஅத் செய்யுங்கள்.

இவ்வாறு இல்லாமல் நீங்கள் பைஅத் செய்து விட்டு சென்று விடுவீர்கள். பிறகு மவ்லவிகளுடைய ஆட்சேபனைகளைக் கேட்டு பைஅத்திலிருந்து திரும்பி விடுவீர்களானால் பாவங்களை செய்தவர்கள் ஆவீர்கள். அதாவது பைஅத் செய்து விட்டு நீங்கள் விலகினால் மிகப்பெரிய பாவிகளாகி விடுவீர்கள். எனவே குறைந்தது ஒருவார காலமாவது எனது அருகாமையில் இருங்கள். நாங்கள் அமைதியாகி விட்டோம். அங்கு தங்கினோம். ஹுஸூர் தொழுகைக்குப் பிறகு வீட்டிற்கு சென்று விட்டார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு கூறுகிறார்கள்: நான் தையல்காரன் ஆவேன். ஒருவரிடம் மாத சம்பளம் 12 ரூபாய்க்கு வேலை செய்து வந்தேன். அவர் நான் அஹ்மதி ஆன காரணத்தினால் என்னை பணியிலிருந்து எடுத்து விட்டார். அறிந்தவர்கள், அறியாதவர்கள் அனைவரும் எதிரியாகி விட்டனர்.

எங்களுடன் இருந்த ஒரு நண்பர் அல்வா வியாபாரம் செய்து வந்தார். அனைத்து முஸ்லிம்களும் இவருடைய கடையின் பொருட்களை வாங்கி உண்ணுவது ஹராமாகும் என உறுதி கொண்டனர்.

இன்றும் பாகிஸ்தானில் சில அஹ்மதி கடைக்காரர்களுடன் இவ்வாறு நடக்கின்றது. மற்றவர்களெல்லாம் இருந்தாலும் லாஹூர் உயர்நீதிமன்றம் ஒரு சட்டத்தை இயற்றி இருக்கிறது. ஷெஜான் என்ற குளிர்பானம் அஹ்மதிகளுடையதாகும். எனவே அதனை குடிப்பது ஹராமாகும் என்று அந்த சட்டம் கூறுகிறது. எனவே, மக்கள் இவருடைய கடையிலிருந்து இனிப்புகளை வாங்குவது ஹராம் என தவிர்த்து வந்தார்கள். ஏழு நாட்கள் வரை தொடர்ந்து இந்தக் கஷ்டங்களை சகித்து வந்தார். ஆனால் எட்டாம் நாள் அவரால் சகித்துக் கொள்ள முடியாமல் பைஅத்திலிருந்து விலகி முர்தத் ஆகி விட்டார்.

இப்போது நாங்கள் இருவர் மட்டுமே இருந்தோம். நாங்கள் இருவரும் தையல்காரர்கள் ஆவோம். நாங்கள் அனைத்தையும் சகித்துக் கொண்டோம்.

அவர் கூறுகின்றார்: எனக்கு பல நாட்கள் பட்டினியாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பல நாட்களுக்குப் பிறகு ஹுஸூரிடம் வந்தேன். நிலைமையை எடுத்துக் கூறினேன். ஹுஸூர், மிகவும் நிம்மதி அளிக்கக்கூடிய வார்த்தையில் நீங்கள் உறுதிப்பாட்டை நிலைநிறுத்தினால் அல்லாஹ் இந்த நிலையை மிக விரைவில் உங்களிடமிருந்து அகற்றுவான்; நல்ல நாட்களைக் கொண்டு வருவான் எனக் கூறினார்கள்.

அவர் கூறுகின்றார்: ஒரு வருடம் வரை மிகவும் கஷ்டத்தில் வாழ்ந்து வந்தேன். அதாவது இந்தக் கஷ்டத்தில் ஒரு வருடம் கழிந்து விட்டது. வருமானத்திற்கு எந்த வழியும் இல்லாமல் இருந்தது. இந்த கஷ்டத்தின் காரணத்தினால் நான் மீண்டும் சில மாதங்களுக்குப் பிறகு காதியான் வந்தேன். ஹுஸூரிடம் சென்று அழுதேன். தனது கஷ்டத்தைக் கூறினேன். மேலும் கூறினேன். எனக்கு ஆப்பிரிக்கா செல்வதற்கு அனுமதி தாருங்கள். ஒருவேளை அல்லாஹ் இதன் மூலம் கருணை புரியட்டும் என்றேன்.

அதற்கு ஹுஸூர், முதலில் இந்த வழியில் மூஃமின்களுக்கு சோதனைகள் வரும். சில சமயங்களில் இது கடினமானதாக இருக்கும். நீங்கள் அங்கு சென்று ஏதாவது கடினமான சோதனைக்கு ஆளாகி விடக்கூடாது என அஞ்சுகிறேன் எனக் கூறினார்கள். நான் மீண்டும் மீண்டும் கேட்டதினால் நான் நாளை துஆ செய்த பிறகு கூறுகிறேன் என்றார்கள்.

பிறகு மறுநாள் ளுஹர் நேரத்தில் இறைவனிடம் தவக்குல் வைத்தவாறு ஆப்பிரிக்கா செல்லுங்கள். ஆனால் ஜமாஅத் செய்தியினை எந்த அளவு முடியுமோ மக்கள் வரை சென்றடையச் செய்வதை கவனத்தில் கொள்ள வேண்டும். எங்கு சென்றாலும் தப்லீக் பணியை விட்டு விடக் கூடாது என்று கூறினார்கள். நான் படிப்பறிவில்லாதவன் ஆவேன். ஆனால் ஜமாஅத்தின் மீதுள்ள அன்பினால் எனக்கு தப்லீக் செய்வதில் எந்த அளவுக்கு ஆர்வம் இருந்ததென்றால் எல்லா நேரமும், எல்லா சமயங்களிலும் தப்லீகின் சிந்தனை இருந்து வந்தது. (அங்கும் அவர் தப்லீக் செய்து வந்தார்.)

பிறகு ஹஸ்ரத் குலாம் முஹம்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லாஹூர் சென்றிருந்தபோது இவர் தனது நிலை குறித்து கூறுகின்றார்கள்:

அந்த நாளில் லாஹூரில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சொற்பொழிவு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அது குறித்த பிரசுரங்கள் ஒட்டப்பட்டு வந்தன. சவுத்ரி மர்ஹூம் அலாயத்துல்லாஹ் சாஹிப் மோதோ மியான் வாலி, கானா வாலி, நாரோவாவைச் சேர்ந்தவர் பசை சட்டியைத் தலையில் தூக்கியவாறு ஊரிலுள்ள எல்லா இடங்களிலும் பிரசுரங்களை ஒட்டி வந்தனர். இவர்களது இந்த செயலைக் கண்டு எதிரிகள் அவரை பல தடவை அடித்தும் உதைத்தும் அவரிடமிருந்த பொருட்களைப் பறித்தும் வந்தனர். சவுத்ரி சாஹிப் பிரசுரங்களை ஒட்டி விட்டு வந்தார். மவ்லவிகள் அதனை கிழித்து வந்தனர். மேலும் கெட்ட வார்த்தைகளால் ஏசி வந்தனர். இது அந்த நாட்களில் நடந்த சம்பவமாகும். ஹுஸூர் அவர்கள் தங்கியிருந்த வீட்டின் அருகே மரங்கள் இருந்தன. ஒரு எதிரி மவ்லவி, அவரை மக்கள் மவ்லவி டாலி என்றே அழைப்பார்கள். அவர் வெறும் கால் சட்டை மட்டுமே அணிந்திருந்தார். அவரது கழுத்திலோ அல்லது தலையிலோ எந்த விதமான துணியும் இருந்ததில்லை. மிகவும் மோசமான கெட்ட வார்த்தைகளைக் கூறி வந்தார். அவர் அந்த மரத்தில் ஏறியவாறு வீணான செயலில் ஈடுபட்டும், கெட்ட வார்த்தைகளைக் கூறியும் வந்தார்.

பிறகு வஸிராபாத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் ஹாஃபிஸ் குலாம் ரஸூல் சாஹிப் அறிவிப்பு செய்கின்றார்கள்:

ஒருமுறை நான் காதியான் வந்தேன். அங்கு வந்து எனது வழக்கைப் பற்றி கூறினேன். எதிரிகள் பொய்யான வழக்கைப் போட்டு பொய் சத்தியங்களைச் செய்து எனது வீட்டை அபகரித்துக் கொண்டனர் என்றார்.

ஹாஃபிஸ் சாஹிப், மக்கள் தனது பையன்களின் திருமணம் மற்றும் சுன்னத் (கத்னாவிற்காக) வீட்டை அழித்து விடுகின்றார்கள். உங்களது வீடு இறைவனுக்காக சென்றது என்றால் போகட்டும் விடுங்கள். அல்லாஹ் வேறொன்றை இதனைவிட சிறந்ததாக தருவான் என்றார்கள்.

இறைவன் மீது ஆணையாக! இந்த தூய்மையான வார்த்தைகளை கேட்டதும், எனது உள்ளத்தில் அந்த எண்ணம் அழிந்துகொண்டே போனது. எனது உள்ளத்தில் அல்லாஹ்வுடைய அந்த கவிதை நினைவில் வந்தது.

சுலைகா எகிப்தின் கஜானாவைக் கொடுத்து யூசுப் (அலை) அவர்களை வாங்கினார்கள். அப்போது கூறினாள்.

சில கற்களைக் கொடுத்து உயிரை வாங்கியுள்ளேன். இறைவனுக்கு நன்றி. மிகவும் மலிவான வியாபாரம் செய்துள்ளேன்.

கூறுகின்றார்கள்: நானும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றேன். அல்லாஹ் எனக்கு இந்த கண்ணியம் மிகுந்த ஊரில் இடம் கொடுத்திருக்கின்றான். முன்பை விட பல மடங்கு சிறந்ததை கொடுத்திருக்கின்றான். மனைவியையும் கொடுத்திருக்கின்றான். பிள்ளைகளையும் கொடுத்திருக்கின்றான். இந்த இடத்தில் எனக்கு இன்னொரு விஷயம் ஞாபகம் வருகிறத. அதனையும் எழுதுகிறேன். இதிலிருந்து ஏதாவது நல்ல இயல்பு கொண்டவர் பலன்பெறட்டுமாக! அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மரணத்திற்குப் பிறகு ஒருநாள் மஸ்ஜித் முபாரக்கில் காஜா கமாலுத்தீன் சாஹிப் கூறினார்கள். மத்ரஸா அஹ்மதிய்யாவில் படிக்கக் கூடியவர்கள் ஒருநாள் முல்லாக்கள் ஆகி விடுவார்கள். அவர்களால் என்ன செய்ய முடியும்? தப்லீக் செய்வது நமது பணியாகும். மத்ரஸா அஹ்மதிய்யாவை எடுத்து விட வேண்டும். நிறுத்தி விட வேண்டும் என்று கூறினார்.

அப்போது மஹ்மதுல் அஸ்ம் அதாவது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் உட்கார்ந்திருந்தார்கள். உடனே எழுந்தார்கள். தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினார்கள். அதாவது இந்தப் பள்ளிக்கூடத்தை அதாவது மத்ரஸா அஹ்மதிய்யாவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நிறுவினார்கள். இது

தொடரும். இன்ஷா அல்லாஹ் இதிலிருந்து உலமாக்கள் தோன்றுவார்கள். தப்லீக் செய்வார்கள். இதனைக் கேட்டதும் காஜா சாஹிப் வாயடைத்துப் போனார்கள். அப்போது நான் காஜா சாஹிபிற்கு தனது எண்ணத்தில் வெற்றிபெற முடியாது என்பது தெரிய வந்து விட்டது என நினைத்துக் கொண்டிருந்தேன். பார்க்கக்கூடியவர்கள் அறிவார்கள். இந்த மத்ரஸாவிலிருந்து கல்வி பயின்ற தேர்ச்சியாளர்கள் உலகில் தப்லீக் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

ஹஸ்ரத் ஷேக் அப்துல் வஹ்ஹாப் சாஹிப் புதிய முஸ்லிமைப் பற்றி ஹபீப் அஹ்மது சாஹிப் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் ஷேக் சாஹிப் மார்க்க விஷயங்களில் மிகவும் தன்மானம் உள்ளவராக இருந்தார். பல்லுக்குப் பல் என்றபடி அமல் செய்வதற்கு முயற்சி செய்து வந்தார். போட்டியிடக்கூடிய தைரியத்தை சிறப்பாக அல்லாஹ் அவரிடம் ஏற்படுத்தி இருந்தான். எதிரிகளுக்கு எதிரில் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நிற்பார். மிகவும் தைரியமாக போட்டியிடுவார். யாராவது கெட்ட வார்த்தைகளைப் பேசினால், அமைதியாகி விடுவார். மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இந்த கட்டளையின்படி செயல்படுவார். ஏச்சுக்களைக் கேட்டு துஆ செய்வார்கள். கஷ்டங்களைத் தாங்கிக் கொண்டு நிம்மதி அளியுங்கள்.

**ஹஸ்ரத் மியான் முஹம்மது ஸஹூருத்தீன் சாஹிப் கூறுகின்றார்கள்:**

நாங்கள் பைஅத் செய்ய வந்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எங்களிடம் பைஅத்தை வாங்கிய பிறகு உள்ளே சென்று விட்டார்கள். நாங்கள் முதன் முறையாக வந்த போது காதியானில் ஒருநாள் மட்டும் தான் தங்கி இருந்தோம். ஏனெனில் சகோதரர் அப்துல் கபூர் சாஹிப் பயந்து பயந்து காதியான் வந்தார். தனது கிராம மக்களுக்கு நாங்கள் காதியான் சென்றுள்ளோம் என்பது தெரிய வந்து விடக்கூடாது என்பதற்காக விரைவாக திரும்ப வேண்டியதாயிற்று. இறையருளால் நான் யாருக்காகவும் பயப்படவில்லை. எத்தனை நாள் இருந்து வந்தாலும் நான் பயப்படவில்லை. இப்போது எனக்கு மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முதல் சந்திப்பைப் பற்றி நினைவு வரும் போது எனக்கு நான் ஏன் இவ்வளவு சீக்கிரமாக திரும்பி வந்தேன் என மிகவும் வருத்தமும் வேதனையும் இருந்தது. மக்களுக்கு நான் அஹ்மதி ஆகிவிட்டேன் என்பது உறுதியாக தெரிய வந்ததும் எனக்கும் கஷ்டங்களை ஏற்படுத்த ஆரம்பித்தனர். எனக்கு தண்ணீர் கொடுப்பது தடுக்கப்பட்டது. கடைக்காரர்களுடன் கொடுக்கல் வாங்கல் தடை செய்யப்பட்டது. பழங்கள் தருவது தடை செய்யப்பட்டது. இதனால் இரண்டு மூன்று நாட்கள் வரை பட்டினியாக இருக்க வேண்டியதாயிற்று. ஆனால் இறைவனுக்கு ஆயிரம் நன்றிகள் உரித்தாகட்டும்! ஏனென்றால் அவன் என்னை உறுதியாக நிலை நிற்றலில் இருக்கச் செய்தான். அல்ஹம்துலில்லாஹி அலா தாலிக்.

**பிறகு ஹஸ்ரத் குலாம் ஹுஸைன் சாஹிப் பராயின் கூறுகின்றார்கள்:**

ஒருமுறை எனது தந்தையுடன் நானும் ஒரு கூட்டத்தில் உட்கார்ந்திருந்தேன். இந்த விஷயம் இன்றிலிருந்து அதாவது அவர் இந்த சம்பவத்தை எழுத்து மூலமாக கொடுக்கும் போது 60 வருடங்களுக்கு முன்பு உள்ளதாகும். எனது தந்தை கூறினார். தலைப்புகளில் இருந்து தெரிய வருவது என்னவென்றால் இமாம் மஹ்தி தோன்றி விட்டார் அல்லது தோன்றப் போகிறார் என்பதாகும். அவர் எப்போது தோன்றுவாரோ உடனே அவரை ஏற்றுக் கொள்ளவும். அவரை மறுப்பதன் விளைவு உலகில் இழிவு உண்டாகும். மறுமையில் இதற்குரிய விளைவு நல்லதாக இருக்காது. கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரிடமும் இதனை மீண்டும் மீண்டும் அறிவுறுத்தினார்கள். மேலும் இதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தால் நான் முதலில் அன்னார் மீது நம்பிக்கை கொள்வேன் என்றும் கூறினார்கள். ஆனால் இறை விருப்பம் அவர், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாதம் புரிவதற்கு முன்பாகவே மரணமடைந்து விட்டார்.

அதற்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாதம் புரிந்தார்கள். எனது சகோதரி மகன் ரஹ்மத் அலி பைஅத் செய்தார். நான் அவரை மிகவும் அதிகமாக எதிர்த்து வந்தேன். இமாம் மஹ்தி, ஸையத் வம்சத்தைச் சார்ந்தவராக இருப்பார். அவருக்கு தெரிந்த சில அடையாளங்களை கூறினார். மேலும் கூறினார்: நீ மிர்ஸாவிடம் பைஅத் செய்து வந்துள்ளாய் என்றேன். இதற்கு அவர் கூறினார். இப்போது நீங்கள்

பைஅத் செய்யவில்லை என்றால் பிறகு மிகவும் வருத்தப்படுவீர்கள். ஒருமுறை அவரை போய் பாருங்கள். அவர் மீண்டும் மீண்டும் வற்புறுத்திய காரணத்தினால் ஒருவேளை இவர் உண்மையாளராக இருந்தால் பிறகு நான் அங்கேயே தங்கி விடுவேன் என எண்ணி, மேலும் நான் சொந்தமாகவே மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை விசாரனை செய்வேன். திருப்தி அடைந்து விட்டால் பைஅத் செய்வேன் என நினைத்து காதியான் சென்றேன்.

இந்த வகையில் நான் ஹஸ்ரத் சாஹிபிடம் சென்றேன். முஹம்மது ஹுஸைன் குக்ரேவாலே தான் என்னை ஹஸ்ரத் சாஹிபுடன் சந்திக்க செய்தார். நான் ஹஸ்ரத் சாஹிபிடம் சென்றபோது, ஹுஸுர் மஸ்ஜிதில் முஹம்மது சாதிக் சாஹிபுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது பள்ளிவாசல் எவ்வளவு சிறியதாக இருந்ததென்றால் ஒரு ஸஃப்பில் 6 பேர் மட்டும் தான் நிற்க முடியும். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது அருகில் உட்கார்ந்தேன். அன்னாருடைய கால்களை அமுக்க ஆரம்பித்தேன். மேலும் இதனைக் கூறினேன். நான் இமாம் மஹ்தியைப் பற்றி உலமாக்களிடம் கேட்டிருக்கின்றேன். எமன் நாட்டின் மினாராவில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறங்குவார்கள். ஸையத் வம்சத்தில் பிறந்த இமாம் மஹ்தி கீழே அவரை சந்திப்பார். ஆனால் தாங்களே முகலாய வம்சத்தைச் சேர்ந்தவராக இருக்கின்றீர்களே? பிறகு எவ்வாறு நீங்கள் இமாம் மஹ்தி ஆவீர்கள். எனக்கு இதனை புரிய வைத்தால் நான் பைஅத் செய்து விடுவேன். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனது தோள்பட்டையில் கை வைத்தார்கள். முஃப்தி சாஹிப் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது ஹஸன் சாஹிப் ஆகியோரிடம் கூறினார்கள். இவருக்கு புரிய வையுங்கள். பிறகு மவ்லவி சாஹிப் என்னை அழைத்துக் கொண்டு அச்சகத்திற்கு சென்றார். அங்கு சென்று பேசினோம். பிறகு எனக்கு எல்லா விஷயங்களும் புரிய வந்தது. நான் மவ்லவி சாஹிபிடம் உடனே எனது பைஅத்திற்கான ஏற்பாட்டை செய்யுங்கள் என்றேன். அது ளுஹருடைய நேரமாக இருந்தது.

ஹஸ்ரத் சாஹிப் கூறினார்கள்: இன்னும் தெரிந்து கொள்ளுங்கள். ஹுஸுர் எனது மற்றும் தரம்கோட்டைச் சேர்ந்த ஒரு சீக்கியருடைய பைஅத்தையும் வாங்கினார்கள். அப்போது நான் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனது மகள் திருமண வயதை அடைந்திருக்கிறார்கள். அவளது நிச்சயம் எனது சகோதரியின் மகனுடன் செய்துள்ளேன். சகோதரியின் மகனுடன் முதலிலேயே நிச்சயம் செய்யப்பட்டுள்ளது. அந்தப் பையன் அஹ்மதி அல்லாதவர் ஆவார். இதனைப் பற்றி கூறுங்கள் என்றேன். ஒரு தூய்மையான நபருடைய ஒரு பகுதியை மற்றவர்களுக்கு கொடுப்பது சரியானதல்ல. ஏனென்றால் அவர்கள் எனது எதிரி ஆவார்கள். அவனிடமிருந்து பிறக்கக்கூடிய சந்ததியும் என்னை எதிர்க்கவே செய்வர்.

அப்போது நான் கூறினேன். ஹுஸுர் நிச்சயம் செய்யப்பட்டு ஏறக்குறைய 18 வருடங்கள் ஆகி விட்டன. இது எவ்வாறு நடக்கும் என்றேன். அதறகு ஹுஸுர், நான் கூறுவதைக் கூறி விட்டேன். இதற்குப் பிறகு உமது விருப்ப் என்றார்கள். அப்போது ஹுஸுர் அவர்கள் கட்டளையிட்டார்கள். நீங்கள் அஹ்மதி அல்லாதவர்கள் பின்னால் நின்று தொழக்கூடாது. இதற்குப் பிறகு நான் வீட்டிற்கு வந்தேன். மறுநாள் வீட்டில் உள்ளவர்களை அழைத்துக் கொண்டு எனது மாமனார் வீட்டிற்கு சென்றேன். தொழுகைகளை தனியாக தொழ ஆரம்பித்தேன். மக்கள் இவர் மிர்ஸாயி ஆக ஆகி விட்டாரா? எனக் கேட்டனர். அதற்கு நான் அஹ்மதி ஆகி விட்டேன் என்றேன்.

அப்போது எனது மாமனார் என்னைப் பார்த்துக் கூறினார். சில ஆலிம்கள் லாஹுரிலிருந்து வந்துள்ளார்கள். அவர்கள் உங்களது மகளின் திருமணம் முறிந்து விட்டது என்று கூறுகின்றார்கள். அதற்கு எனது மாமனார் கூறினார். எனது மகளின் திருமணம் எவ்வாறு முறியும்? உனது மகளுக்கு வேண்டுமென்றால் அவ்வாறு ஆகலாம். இந்தப் பையன் மிகவும் நல்லவன் ஆவான். முஸ்லிம்களில் பல பிரிவுகள் இருக்கின்றன. அனைவரும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்கின்றனர்.

பிறகு யாரும் எதுவும் செய்து விடக்கூடாது என்பதற்காக அவர் என்னை வீட்டிற்கு அழைத்துச் சென்றார். எனது மைத்துனர்கள் அதாவது மனைவியின் சகோதரர்கள் சண்டை எதுவும் வந்துவிடக்கூடாது என்பதற்காக மிகவும் அதிகமாக என்னை எதிர்த்தார்கள். நான் எனது மனைவியிடம் என்னை தேடாதீர்கள். நான் எனது கிராமத்திற்கு செல்கின்றேன் என்றேன். இதனைப் பற்றி எனது மாமனாருக்கு தெரிய வந்ததும் ஒரு நபரை அனுப்பி என்னை திரும்ப அழைத்துக் கொண்டார். எனது மனைவி நீங்கள் ஏன் சென்றீர்கள்? என்றாள்.

அதற்கு நான் உனது விருப்பம் என்னவென்பது தெரியாது? குழப்பம் வந்துவிடக் கூடாது என பயந்துதான் சென்றேன் என்று கூறினேன். அப்போது எனது மனைவி தனது சகோதரர்களை நோக்கி கூறினாள். அஹ்மதியானால் பிரச்சனை என்றால் முதலில் நான் அஹ்மதி ஆவேன். அவர் அதாவது கணவன் இரண்டாவது தான் அஹ்மதி ஆவார். நீங்கள் எனக்கு செய்யும் உதவிகளைப் பற்றி எந்தக் கவலையும் இல்லை. எங்களுக்கு உணவு இறைவன் கொடுக்கின்றான். இவருடன்தான் நான் செல்வேன். எனது இறைவன் உணவளிப்பவன் ஆவான். அவள் எழுந்து என்னுடன் வந்தாள். அவளது தந்தை அவளை பிடித்துக் கூறினார். எப்போது வரை நான் உயிருடன் இருப்பேனோ அப்போது வரை நான் கொடுப்பேன் என்றார். மேலும் நான் நோயாளி ஆகி விட்டால் அப்போது பிரச்சனை உனக்கும், உன் சகோதரர்களுக்கும் உரியதாகும்.

பிறகு இரண்டு மூட்டை நெல்லையும், துணிகளையும் கொடுத்து எங்களை இங்கு வந்து சேர்த்தார். அப்போது எனக்கு இரண்டு மகன்களான இப்ராஹீம் மற்றும் ஜான் முஹம்மது, 1 மகள் பரக்கத் பீவி இருந்தனர்.

கூறுகின்றார்: எந்தப் பெண்ணைப் பற்றி ஹஸ்ரத் சாஹிப் அஹ்மதி அல்லாதவர்களுடன் திருமணம் செய்வது தவறு என்று கூறினார்களோ, நான் வந்ததும், ஒரு இரவிலேயே எல்லா ஏற்பாடுகளையும் செய்து, அவருடைய நிகாஹ் தனது கிராமத்தைச் சேர்ந்த மியான் சுல்தான் அலி சாஹிப் செயலருடன் செய்தேன். மேலும் இதனால் எனது சகோதரியின் மூலம் எனது மனைவிக்கு ஏதாவது துன்பங்கள் ஏற்படுமோ என அஞ்சினேன்.

ஆனால் ஹுஸூருடைய கட்டளையை முன் நிறுத்தியவாறு இந்த காரியத்தை செய்வதற்கு ஒப்புக்கொண்டார். அவளை அஹ்மதி வீட்டிற்கு அனுப்பினார். (அதாவது அஹ்மதியுடன் நிகாஹ் செய்து வைத்தார்.)

காலையில் விடிந்ததுமே மக்கள், குலாம் முஹம்மது ஈமானற்றவராகி விட்டார் என பேச ஆரம்பித்தனர். மேலும் எனது அஹ்மதியல்லாத சொந்தங்களும் எனக்கு அதிகமான கஷ்டங்களை கொடுத்தனர். துன்பங்களை இழைத்தனர். அடிக்கவும், உதைக்கவும் செய்தனர்.

ஹஸ்ரத் ஹாபிஸ் ரபி பக்ஸ் சாஹிப் கூறுகின்றார்கள்:

எனது பெரிய பையன் அப்துர் ரஹ்மான தஃலிமுல் இஸ்லாம் உயர்நிலைப் பள்ளியில் 7 ஆம் வகுப்பு படித்து வந்தான். 1907ல் பள்ளிக்கூடத்திலேயே இறந்து விட்டான். அவன் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்ததை அறிந்து நான் வெளியிலிருந்து வந்தேன். ஹஸ்ரத் நூருத்தீன் சாஹிப் அவனுக்கு சிகிச்சை அளித்து வந்தார்கள். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் சென்றேன். ஹுஸூர் அவர்கள் மாத்திரைகளை தன்னிடமிருந்து கொடுத்தார்கள். அதனை பாலில் கரைத்து கொடுக்கும்படி கூறினார்கள். நான் அந்த மாத்திரைகளை கரைக்கக்கூட இல்லை. அவன் மரணமடைந்து விட்டான். பிறகு உடலை பைஸில்லா கொண்டு செல்வதற்கு ஹுஸூரிடம் அனுமதி கேட்டேன். எனக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இரண்டாவது, ஜுமுஆவிற்கு நான் காதியான் சென்ற போது தொலைவிலிருந்து என்னை கண்டவாறு மியான் நபி பக்ஸ் வாருங்கள்! என ஹுஸூர் அவர்கள் என்னை அழைத்தார்கள். அப்போது மிகப்பெரிய நபர்கள் ஹுஸூருடைய அருகில் அமர்ந்து இருந்தார்கள். ஹுஸூர் இந்த எளியவனை தனது வலது பக்கம் உட்கார வைத்தார்கள்.

கூறினார்கள்: மியான் ரபி பக்ஸ் சாஹிப், நீங்கள் மிகவும் அதிகமாக பொறுமையை கையாண்டுள்ளீர்கள். எனது இடுப்பில் கையை வைத்தார்கள். மேலும் கூறினார்கள். நான் உங்களுக்காக அதிகமாக துஆ செய்துள்ளேன். மேலும் செய்து வருவேன். அல்லாஹ் இதற்கு ஈடாக சிறந்தவற்றை தருவான். இதற்கு பிறகு அவருக்கு சந்ததிகளும் பிறந்தன.

சில மார்க்க உணர்வு சம்பந்தப்பட்ட சில சம்பவங்கள் இருக்கின்றன. அதனை கூறுகின்றேன்.

**ஹஸ்ரத் டாக்டர் முஹம்மது துஃபைல் ஜான் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கண்ணியம், மேன்மை எவ்வாறிருந்தது என்றால், யாரெல்லாம் ஹுஸுரை இழிவுபடுத்த, ஏளனப்படுத்த விரும்பினார்களோ அவர்களால் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியவேயில்லை.

டோராவைச் சேர்ந்த ஒரு மவ்லவி கோஸ் முஹம்மது சாஹிப் பட்டாலாவிலுள்ள உள்ள மிஷன் பள்ளிக்கூடத்தில் அரபி ஆசிரியராக இருந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு முஸ்லிம் பணியாளரிடம் பேசும்போது ஹுஸுரைப் பற்றி மிகவும் இழிவான வார்த்தைகளை வெளிப்படுத்தினார். அவரது இந்த செயல் எனக்கு மிகவும் வெறுப்பாக இருந்தது. நான் இவரது வெறுக்கத்தக்க செயலை ரிப்போர்ட் செய்வதற்காக Mr.B.M. அரசுத் தலைமையாசிரியரிடம் சென்றேன். அங்கு சென்ற பிறகு தலையில் இடி விழுந்தது போல் இருந்தது. மின்னல் வெட்டியது போல் எனக்கு ஞாபகம் வந்தது. தலைமையாசிரியர் சாஹிப் ஒரு கிறிஸ்தவர் ஆவார். மதத்தின் அடிப்படையில் நம்முடன் எந்த அனுதாபமும் இருக்காது. எனவே நான் நின்று விட்டேன். ஆனால் அந்த நேரத்தில் எனது உள்ளம் இறைவனிடம் துஆ செய்வதன் பக்கம் சென்றது. பிறகு நான் துஆ செய்தேன். இறைவா! இந்த நபர் உன்னுடைய அன்புக்குரியவருக்கு எதிராக மிகவும் இழிவான வார்த்தைகளை உபயோகித்துள்ளார். இது ஒருவேளை அறிவீனம் மற்றும் மடைமையின் காரணமாகக் கூட இருக்கலாம். உண்மை தெரிய வந்தவுடன் இவர் தவ்பா செய்யலாம். அவருக்கு ஏதாவதொரு அடையாளத்தை வெளிப்படுத்துவாயாக! அது அவருக்கு அறிவுரை பெறுவதற்கான வாய்ப்பாக இருக்கலாம். மேலும் இதில் அவருக்கு எந்த விதமான தண்டனையும் இருக்கக் கூடாது. அதாவது அறிவுரை பெறக்கூடியதாக இருக்க வேண்டும். ஆனால் தண்டனையாக இருக்கக்கூடாது. இந்த நிபந்தனையை அவர் வைத்தார்.

இறைவன் அவருக்கு ஒரு அடையாளத்தைக் காட்டினான். இரயிலில் பயணம் செய்த போது அவருடைய ஒன்றரை அல்லது இரண்டு வயது குழந்தை, பலமுறை தனது தாயின் இடுப்பிலிருந்து கீழே விழுந்தது. கீழே விழுந்து குதித்தது. இரயிலின் பெட்டியின் தரையிலும் விழுந்தது. ஆனால் காயங்கள் எதுவும் ஏற்படாமல் பாதுகாப்பாக இருந்தது. இந்த சம்பவத்தை பயணத்திலிருந்து திரும்பிய பிறகு மக்களிடம் கூறியபோது நான் கூறினேன். அன்றைக்கு நடந்த சம்பவத்திற்கு பிறகு நான் துஆ செய்தேன். உங்களுக்கு ஏதாவது அடையாளம் காண்பிக்கப்பட வேண்டும். ஆனால் உங்களுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படக்கூடாது. இந்த துஆவின் அடிப்படையில் இறைவன் உங்களுக்கு அடையாளத்தை காண்பித்து விட்டான். இதற்கு கண்ணியம் கொடுங்கள். ஆனால் அவர் மிகவும் தற்பெருமையுடன் இது எதார்த்தமாக நடந்தது என பதிலளித்தார்.

நான் எந்த வித அடையாளத்தையும் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்றார். இவர் இந்த அடையாளத்தில் இருந்து பலன்பெறவில்லை. எனவே, இறைவன் பிறகு தனது பிடியில் எடுத்துக் கொண்டான். அவர் திடீரென்று காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். அதே காய்ச்சலால் மரணமும் அடைந்தார். ஆனால் இறப்பதற்கு முன்பாக இந்த தண்டனை அவருக்கு, ஹுஸுருக்கு எதிராக தீய சொற்களை உபயோகித்ததன் காரணமாக ஏற்பட்டது தான் என்பதை அவர் உணர்ந்தார். எனவே இந்த மோசமான நிலையில் என்னை பலமுறை அழைத்தார். அவர் அழைப்பினைக் கேட்டு சென்ற போது அவர் கூறினார். கடைசியில் நீங்கள் தான் என்னைப் பற்றி இறைவனிடம் புகார் செய்துள்ளீர்கள். ஆனால் நீங்கள் புகார் செய்ய மாட்டேன் எனக் கூறினீர்கள். மேலும் எனது தவறு எனக்கு தெரிந்து விட்டது. நான் இப்போது கூறுகின்றேன். நீங்கள் தான் உண்மையாளர்கள். நான் பொய்யன் ஆவேன் என்றார். கடைசியில் மரணிக்கக்கூடிய சமயத்தில் இந்த நல்ல இயல்பை அவர் வெளிப்படுத்தினார்.

ஹஸ்ரத் ஹாபிஸ் முபாரக் அஹ்மத் சாஹிப் லெக்ஸரர் ஜாமிஆ அஹ்மதிய்யா காதியான், ஹாபிஸ் ரோஷன் அலி சாஹிப் உடைய வார்த்தையில் அறிவிப்பை கூறுகின்றார்கள்:

மவ்லவி கான் மலிக் சாஹிப் தனது மரியாதையின் காரணமாக பஞ்சாப் முழுவதும், மாறாக இந்தியாவிலும் புகழ்பெற்று இருந்தார்கள். பெரும்பான்மையான உலமாக்கள் அவருடைய மாணவர்களாக இருந்தார்கள். இவ்வளவு மதிப்பும், மரியாதைக்கு உரிமையாளராக இருந்தும் மிகவும் எளிமையானவராகவும் சூஃபியாகவும் இருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக எந்தவொரு கடினமான வார்த்தையையும் கேட்க விரும்பமாட்டார்.

ஒருமுறை ஜலால்பூர் சரீப் வாலே பீர் முஸஃப்பர் ஷா சாஹிப் என்பவர் தனது மகன்களுக்கு கல்வி கற்றுக் கொடுப்பதற்காக இவரை அழைத்தார். ஆனால் அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக ஒரு கடினமான வார்த்தையை உபயோகித்தார். அப்போது அவர் கூறினார். நான் உங்களது பிள்ளைகளுக்கு படித்துக் கொடுப்பதற்கு தயாராக இல்லை என்று கூறி மறுத்து விட்டார்.

ஹஸ்ரத் முன்ஷி இமாமுத்தீன் சாஹிப் (ரலி) கூறுகின்றார்கள்: ஒருமுறை மிர்ஸா நிஸாமுத்தீன் மற்றும் மிர்ஸா இமாமுத்தீன் ஆகியோர் சுவர் எழுப்பி பள்ளிவாசலுக்கு செல்லக்கூடிய பாதையினை அடைத்த போது நடந்த சம்பவமாகும். இதன் மூலம் அஹ்மதிகளுக்கு மிகவும் கஷ்டம் ஏற்பட்டது. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நீதிமன்றத்தினை அணுகி நியாயம் கேட்டார்கள். அந்த சமயத்தில் எனக்கும் முன்ஷி அப்துல் அஸீஸ் சாஹிப் உஜ்லவிக்கும் கட்டளையிட்டார்கள். நீங்கள் சுவர் கட்டுவதற்கு முன்பாக இந்த வழியனை பயன்படுத்திய உங்களது பகுதியிலுள்ள கண்ணியம் மிகுந்த மக்களுடைய சாட்சிகளைக் கொண்டு வாருங்கள். இதன்படி எனது பகுதியில் இருந்த பக்கீர் நம்பர்தார் லோசக்கோவை காதியான் அழைத்து வந்தேன். இங்கு தான் நடுவர் குழு வந்திருந்தது. அவர் சாட்சியம் அளித்தார். நாங்கள் பாதுகாப்பு கொடுத்த காலத்தில் இந்த பகுதியில் தான் வந்து போய் இருந்தோம். சில சமயங்களில் குதிரையில் இந்த வழியில் பயணம் செய்துள்ளோம் என்றார். மிர்ஸா நிஸாமுத்தீன் இந்த சாட்சியம் அளிப்பதற்கு முன்பு நீங்கள் சாட்சி அளிப்பதற்காகவா வந்துள்ளீர்கள் எனக் கேட்டார். அதற்கு பக்கீர் நம்பர்தார் ஆம் என பதிலளித்துள்ளார். அப்போது மிர்ஸா நிஸாமுத்தீன் மிகவும் மோசமான வார்த்தைகளைக் கூறினார். அதற்கு பக்கீர் சாஹிப் கூறினார். மிர்ஸா சாஹிப் நீங்கள் என்னை கெட்ட வார்த்தைகளால் பேசினீர்கள் என்றால், நீங்கள் எங்கள் பகுதியில் வேட்டையாடுவதற்காக வரும்போது இதனை விட மோசமாக உங்களுடன் நடந்து கொள்வோம் என்றார். பிறகு மிர்ஸா நிஸாமுத்தீன் இதனைக் கேட்டு அமைதியாகி விட்டார்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு ஆரம்பத்திலேயே எனக்கு பழக்கப்பட்ட மிர்ஸா நிஸாமுத்தீன், கோபத்தின் காரணமாக ஒரு வருடம் வரை பேசவேயில்லை. ஒரு வருடத்திற்குப் பிறகு தற்செயலாக குர்தாஸ்பூர் சென்றிருந்தேன். அங்கு கோர்ட்டுக்கு வெளியில் உட்கார்ந்திருந்தேன். அங்கு மிர்ஸா நிஸாமுத்தீனும் வந்திருந்தார். முன்ஷி சாஹிப் என்னிடம் ஏன் கோபமாக இருக்கின்றீர்கள். என்னிடம் ஏன் பேசுவதில்லை எனக் கேட்டார். நான் கூறினேன். நான் உங்களுடன் பேசினேன் என்றால், நீங்கள் எங்களது தலைவர் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி கண்ணியக் குறைவாக மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்துவது எனக்கு கஷ்டமாக இருக்கும். அதற்கு அவர், நான் அன்னாரை மிகவும் உயர்ந்தவராகக் கருதுகின்றேன். அன்னார் மூலமாக எனக்கு பல நன்மைகள் கிடைத்திருக்கின்றன என்றார். நான் எனது தோட்டத்தின் விறகுகளை 1000 ரூபாய்க்கு விற்றேன். தற்போது காய்கறிகளை விற்றதன் மூலம் ஆயிரம் ரூபாய் வருமானம் வந்துள்ளது. இப்போது எனக்கு மிக அதிகமாக வருமானம் வருகிறது என்றார். பிறகு இதுதான் உங்களது நிலை என்றால் சரி, நான் உங்களுடன் சமாதானம் செய்து கொள்கிறேன் என்றேன்.

**கலிஃபா நூருத்தீன் சாஹிப் ஜம்முவைச் சேர்ந்தவர் கூறுகின்றார்:**

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி அஹ்மதிய்யத்திற்கு முன்பே எனது நண்பராவார். ஒருமுறை லாஹூரில் சீனியா பள்ளிவாசலில் தொழுகை நடத்தினார். நான் பள்ளிவாசலில் நுழைந்தேன். தனியாக தொழுதேன். மவ்லவி தொழுகையை முடித்தவுடன் நான் தனியாக தொழுவதைக் கண்டு, நான் அவருக்கு பின் நின்று தொழுதேன என நினைத்தார். அவர் மிகவும் சந்தோசப்பட்டார். நான் கூறினேன். மவ்லவி சாஹிப், யாரெல்லாம் மேற்கு திசையினை நோக்கி தொழுகிறாரோ அவரெல்லாம் உங்களுக்கு பின் நின்று தொழுதவர் ஆவாரா? அஹ்மதி அல்லாதவர்களுக்கு பின்பு நின்று தொழுவது வேறு விசயம். எனக்கு எனது பின்பு வேறெவராவது அஹ்மதியல்லாதவர் தொழுதாலே பிடிக்காது என்றேன். மவ்லவி சாஹிப் இதனைக் கேட்டு ஆச்சரியப்பட்டார். மேலும் கூறினார்:

மற்ற அஹ்மதிகளுக்கெல்லாம் இதுபோன்ற நம்பிக்கை கிடையாது. அவர்கள் தனக்குப் பின்னால் அஹ்மதி அல்லாதவர்கள் தொழுவதை தடுக்கமாட்டார்கள் என்றார். நான் கூறினேன். மவ்லவி சாஹிப் ஒவ்வொருக்கும் தத்தமது சிந்தனை இருக்கத்தானே செய்யும்.

***இறைவன் கூறுகின்றான்:*** *இணை வைப்பவர்களுக்காக பாவமன்னிப்புக் கோருவது நபிக்கோ நம்பிக்கையாளர்களுக்கோ தகுமானதன்று. அவர்கள் நெருங்கிய உறவினர்களாயிருந்தாலுஞ்சரியே! (9:113)*

உங்களுடைய கொள்கை முஷ்ரிக் கொள்கை இல்லையா என்ன? எனது பார்வையில் முஷ்ரிக் ஆகத்தான் தென்படுகின்றது. மேலும் நான் இமாம் என்ற அடிப்படையில் எனது பின்னால் நின்று தொழுபவர்களுக்காக என்ன துஆ செய்வேன்? என்னையும் மன்னித்து விடுவாயாக! உன்னுடைய மஸீஹை மறுப்பவனாகிய இவரையும் மன்னித்து விடுவாயாக! இவர் இமாம் மஹ்தியை கெட்ட வார்த்தைகளால் ஏசவும் செய்கிறார் என்றா துஆ செய்வேன் என்றார்.

இந்த சம்பவத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் கூறினேன். அன்னார் கேட்டு சிரித்தார்கள். முஹம்மது நஸீர் பாரூக்கி சாஹிப் கூறுகின்றார்கள்:

பல வருடங்கள் கழிந்த பிறகு 1908ல் தனது கிராமம் மற்றும் அதற்கு அருகில் ஹக்கீம் நவாப் அலி சாஹிப் பாரூக்கிற்கு எதிர்ப்பு வலுத்தது. எப்படிப்பட்ட கஷ்டங்கள் இழைக்கப்பட்டன என்பதனை விளக்க மிக அதிக நேரம் தேவைப்படும். இப்படிப்பட்ட ஒவ்வொரு கஷ்டத்திலும் அவர் உறுதியாக நிலை நின்றார். ஒருபோதும் தன்மானத்தை விட்டுக் கொடுக்காமல் உறுதியாக நின்றார். இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இதற்குப் பதிலாக அல்லாஹ் ஹக்கீம் சாஹிபுடைய பொருளாதார நிலையை மிகவும் நல்ல முறையில் உயர்த்தினான். அவர் எப்போதும் இறைவனுக்கு நன்றி செலுத்தி வந்தார்.

**ஹஸ்ரத் ஷேக் ஜைனுல்லாபுதீன் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் இளைஞன் ஆகக்கூடிய நிலையில் இருந்தேன். அப்போது ஹஸ்ரத் சாஹிபை சந்திக்க காதியான் வந்தேன். இவர் இளைஞராக இருந்தார். ஹுஸூர் அவர்கள், மியான் ஜைனுல்லாபுதீன் திருமணத்திற்கான ஏற்பாடு எதுவும் நடக்கிறதா என்ன? எனக் கேட்டார்கள். அதற்கு நான் நிச்சயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் நான் அஹ்மதி ஆன காரணத்தால் அது தடைபட்டு விட்டது என்றேன்.

ஹுஸூர் அவர்கள் சிரித்தவாறு நீங்கள் தற்போது வரை பைஅத் எதுவும் செய்யவில்லையே! பிறகு அஹ்மதிய்யத்தினால் எவ்வாறு திருமணம் நடக்காமல் போனது என்றார்கள். நான் கூறினேன். அவர்கள் என்னிடம் மிர்ஸா சாஹிபை காஃபிர் என்று கூறச் சொல்கிறார்கள். என்னால் அவ்வாறு சொல்ல முடியாது. மேலும் நான் அவர்களிடம் நீங்கள் ஒரு பெண்ணுக்கு பதிலாக 10 பெண்களை கொடுத்தாலும் நான் மிர்ஸா சாஹிபை வலியுல்லாஹ் என்றுதான் அழைப்பேன் என்றேன்.

**ஹுஸூர் கூறினார்கள்:** அல்லாஹ் எதனை செய்தாலும் நல்லதாகவே செய்வான். அல்லாஹ் இந்த அனைத்து சஹாபாக்களுடைய தர்ஜாவை உயர்த்துவானாக! இவர்களது சந்ததிகளிலும் பொறுமை, உறுதிப்பாடு மற்றும் உறுதியாக நிலைநிற்றலை தொடரச் செய்வானாக! மேலும் எப்போதும் இவர்கள் அஹ்மதிய்யத்துடனும், கிலாஃபத்துடனும் உறுதியான தொடர்பு கொண்டிருக்கச் செய்வானாக!

இன்று, ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இரண்டு ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். அதில் ஒன்று, இங்கு கொண்டு வரப்பட்ட ஜனாஸாவாகும். இது மதிப்பிற்குரிய மர்ஹூம் சம்சுல் ஹக் சாஹிபின் மனைவி மதிப்பிற்குரிய அமத்துல் ஹபீஸ் கானும் சாஹிபா உடையதாகும். இங்கு வசிப்பதற்காக சில காலங்களுக்கு முன்பாக இவர் இங்கு வந்தார். அவருடைய வழக்கு போன்றவைகள் சரியாகி விட்டது. இருந்தபோதிலும், ஏப்ரல் 8ம் தேதி தனது 81வது வயதில் இவரது மரணம் ஏற்பட்டது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் மிக நீண்ட காலமாக குவெட்டாவின் லெஜ்னா சதர் ஆக இருந்திருக்கின்றார். இவருக்கு மிகப்பெரிய வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. பிறகு அங்கிருந்து லாஹூர் வந்தார். அங்கு தனது ஹல்கா சதர் ஆக இருந்திருக்கிறார். தப்லீக் செய்வதற்கு மிகுந்த ஆர்வம் கொண்டவராவார். இங்கு வந்த போதும், இந்த வயதிலும் தப்லீக் செய்வதற்காக ஆங்கிலத்தின் சில வார்த்தைகளை கற்க முயற்சி செய்துள்ளார். மிகவும் நல்ல துஆ செய்யக்கூடிய முறையாக தொழுகையை பேணக்கூடிய நவாஃபில்களை கடைபிடிக்கக்கூடிய கித்மத்தே கல்க் செய்யக்கூடிய அதன் உணர்வு நிறைந்த பெண்மணியாகத் திகழ்ந்தார்கள். ஏழைகளுக்கு உதவி செய்யக்கூடியவராகவும் இருந்திருக்கிறார்.

கிலாஃபத்துடன் அசாதாரணமான உணர்வு மிகுந்த அன்பு கொண்டிருந்தார்கள். நல்லொழுக்கத்திலும் விசுவாசத்திலும் நிறைந்து காணப்பட்டார்கள். பிள்ளைகளின் தர்பிய்யத்தில் மிகுந்த கவனம் கொண்டவராக இருந்தார். அவர்களை எப்போதும் ஜமாஅத்திற்கும் கிலாஃபத்திற்கும் கட்டுப்பட்டு நடப்பதற்கு அறிவுறுத்தி வந்துள்ளார்கள். இவர் 8ல் ஒரு பங்கு வஸிய்யத் செய்த மூஸி ஆவார். இவரது ஜமாஅத்தின் தொடர்பு பலருக்கும் முன்னுதாரணமாக இருந்தது. இவருடைய பிரிவில் வாடுபவர்களில் 4 மகள்களும், 3 மகன்களும் உள்ளனர். இவர் இங்குள்ள ஸயீம் ஆலா இலண்டன் பகுதியின் டாக்டர் முஜீபுல் ஹக் உடைய சகோதரி ஆவார். இறை அருளால் இவரது தர்பிய்யத்தின் விளைவாக இவர்களுடைய சந்ததிகளும் ஜமாஅத்துடனும் கிலாஃபத்துடனும் நல்ல தொடர்பு கொண்டுள்ளனர். அல்லாஹ் இவர்களது தொடர்பை மேம்படுத்திக் கொண்டே செல்வானாக! இவர்களுடைய சந்ததிகளிலும் இதனை தொடரச் செய்வானாக! இதன் மூலமாக சந்ததிகள் ஜமாஅத்துடன் தொடர்பு மற்றும் நெருக்கம் மூலமாக மர்ஹூமுடைய ஆன்மா நிம்மதி பெறட்டுமாக! இவரது ஜனாஸா ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நடைபெறும். நான் வெளியில் சென்று தொழ வைப்பேன். ஜமாஅத்தார்கள் பள்ளிவாசலின் உள்ளே ஸஃப்களை சரி செய்யுங்கள்.

இரண்டாவது ஜனாஸா ஸையத் முஹம்து அப்ஸல் சாஹிப் சஹாபாவின் மகன் மதிப்பிற்குரிய ஸையத் முஹம்மத் அஹ்மது உடையதாகும். இவருடைய தாய் ஆசிரியை சர்தார் பேகம் சாஹிபாவும் மிக நீண்ட காலமாக ஜமாஅத்தின் பள்ளியில் தொண்டாற்றியுள்ளார்கள். இவர் சஹாபியாக இருக்கவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்திலேயே பைஅத் செய்திருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்க்கவில்லை. தனது கணவருக்கு முன்பாகவே பைஅத் செய்திருக்கலாம்.

ஸையத் முஹம்மது அஹ்மது சாஹிப். இரண்டாவது கலீஃபாவுடைய மகன் மிர்ஸா கலீல் அஹ்மது சாஹிப் உடைய பால்குடி சகோதரர் ஆவார். மேலும் உம்மே தாஹிர் உடைய மகள் ஸய்யதா அமத்துல் பாஸித் சாஹிப் உடைய இரண்டாவது சகோதரி பால்குடி சகோதரி ஆவார். இவருடைய ஒரு மகன் முனவ்வர் அஹ்மது சாஹிப். சாஹிப்ஸாதா மிர்ஸா ரஃபீயி அஹ்மது சாஹிப் உடைய மருமகன் ஆவார். மற்றொரு மகன் இங்கு ஸையத் முஸஃப்பர் அஹ்மது சாஹிப் ஸகந்தோப்பில் மருத்துவராக செயல்படுகிறார். ஒருவர் அமெரிக்காவில் இருக்கிறார். இதுபோன்றே அனைத்து பிள்ளைகளும் உள்ளனர். அல்லாஹ் மர்ஹூமுடைய தர்ஜாவை மேம்படுத்துவானாக! இவர் மீது கருணை காட்டுவானாக! இவர்களது பிள்ளைகளையும் ஜமாஅத்துடன் தொடர்புடையவர்களாக இருக்கச் செய்வானாக! சந்ததிகளுக்கு கித்மத் செய்வதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

இவர் டிஃபன்ஸ் லாஹூரில் 22 வருடம் சதராக ஜமாஅத்திற்கு தொண்டாற்றியுள்ளார். மேலும் மிகவும் உழைப்புடன் அங்கு கெஸ்ட் ஹவுஸ் மற்றும் ஒரு காம்ளக்ஸை தனது கண்காணிப்பில் மிகவும் குறைந்த செலவில் கட்டினார்கள். அல்லாஹ் இவரது தர்ஜாவையும் உயர்த்துவானாக! இவரது ஜனாஸா காயிப் ஜனாஸாவாகும். இது கொண்டு வரப்பட்டுள்ள ஜனாஸாவுடன் சேர்த்து தொழப்படும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 13.04.2012**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456